10th September 1958]

Sri M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, திண்டிவனம் தாலுகாவில் கூடலூர் கிராமத்தில் ஜனங்கள், தொகையை வசூலித்து அங்குள்ள ஸப்-ட்ரஷரியில் கட்டியிருக்கிறார்கள். அவ்விதமிருந்தும் இது வரை மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுக்கப்படவில்லை. இந்த காலதாமதத்திற்குக் காரணம் என்ன என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

The Hon. Sri P. KAKKAN : எனக்குக் கிடைத்திருக்கிற தகவலில் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது மாதிரி இல்லை. விழுப்புரம் ஹரிஜன இன்ஸ்பெக்டரிடம் விசாரணை செய்யச் சொல்லியிருக்கிறேன்.

Sri A. GOVINDASAMY : கனம் அங்கத்தினர் ஜகந்நாதன் அவர்களுடைய கேள்வியில் பணம் கொடுத்திருப்பதாக இருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் பதிலில் பணம் கொடுக்கவில்லை என்ற தகவல் இருப்பதால் அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலிப்பார்களா ? ஆதித் திராவிட மக்களுக்கு இலவசமாக நிலம் வழங்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

The Hon. Sri P. KAKKAN : எல்லா இடங்களிலும் இலவசமாகக் கொடுப்பதில்லை. எங்கெங்கு கொடுக்க வசதியிருக்கிறதோ அங்கங்கு சிறிதளவு வாங்குவது வழக்கம். கனம் அங்கத்தினர் சொல்வதையும் பரிசீலித்துப் பார்க்கிறேன்.

Village roads

* 139 *Q*.—Sri K. RAMACHANDRAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number and extent of village roads formed during 1956–57 and 1957–58 under the Local Development Scheme; and

(*b*) the expenditure incurred therefor by the Government during those years?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) 1,063 village roads to the extent of 1,083 miles $2\frac{1}{2}$ furlongs for 1956–57 and 482 roads to the extent of 510 miles 6 furlongs for 1957–58 have been formed under the Local Development Works Programme.

(*b*) The total expenditure incurred in 1956–57 and 1957–58 in respect of above works is Rs. 32,54,878·74 and Rs. 15,50,519·29 respectively.

Mr. SPEAKER : அடுத்தக் கேள்வி 140-ம் கேள்வி.

Sri D. S. AUTHIMOOLAM : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஒவ்வொரு கேள்வியிலும், உப கேள்விகள் போடுவதற்கு அங்கத்தினர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Mr. SPEAKER : எந்த விதிப் பிரகாரம் நீங்கள் இதைக் கேட்கிறீர்களென்று சொல்லுங்கள்.

Ban to stage a drama

* 140 *Q*.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Avanashi Police, Coimbatore district, prohibited the staging of a drama near Avanashi by any Kisan organization in February 1958; and

(*b*) if so, the reason therefor?